**IN THE COURT OF THE LABOUR COURT, SALEM**

# C.P.No. 76/2019

**Deposition of RW1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சுந்தரமூர்த்தி | Husband / Father's Name | : தங்கவேல் |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Age | : | Calling | : |

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Thiru. M. Raju, Bench Clerk Grade-I of this court on 08.08.2022 in accordance with Provisions X of Evidence Act 1872.

குறுக்கு விசாரணை

நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 1978 முதல் 2000 ஆண்டு வரை இருந்தேனா என்றால் இல்லை. தொழிலாளர்களிடம் மாதா மாதம் அவர்கள் ஈட்டிய சம்பளத்திலிருந்து வைப்புநிதிக்காக ஒரு குறிப்பிட்ட தொகை பிடித்தம் செய்யப்படுகிறது என்றால் சரிதான். அதே அளவுக்கு நிர்வாகமும் அவர்களது பங்களிப்பை செலுத்துகிறது என்றால் சரி. பிடித்தம் செய்யப்படும் வருங்கால வைப்பு நிதிக்கு பதிவேடு பராமரிக்கப்படுகிறது என்றால் சரி. வருங்கால வைப்புநிதிக்கான மத்திய அரசு அலுவலகத்தில் இந்த நிதியை செலுத்துவதற்கான எதிர்மனுதார் நிறுவனம் எப்போது விதிவிலக்கு பெற்றது என்றால் 01.09.1998 லிருந்து ஓய்வூதிய நம்பக நிதி டிரஸ்ட் ஆரம்பிக்கப்பட்டது அதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது. விதிவிலக்கு பெற்றது சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். ஓய்வூதிய நம்பகத்தை உருவாக்குவது தொடர்பாக தொழிலாளிக்கு தொழிற்தகராறு சட்டம் பிரிவு 9 A ன் படி அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் தொழிற்சங்கங்கள் சேர்ந்து ஓய்வூதிய நம்பக நிதி

டிரஸ்டை ஏற்படுத்தியுள்ளதால் அறிவிப்பு கொடுக்கப்படவில்லை. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ. 12 ஆவணத்தை யாராலும் சான்றளிக்கப்படிவில்லை என்றால் சரிதான். ஓட்டுநர் ராஜுவின் வருங்கால வைப்புநிதி பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஓட்டுநர் ராஜுவின் வருங்கால வைப்புநிதி கணக்கீடு சரியானதா என்று அந்த பதிவேட்டை பார்த்தால் தான் கூற முடியும் என்றால் சரி. 15.10.1999 ல் 90 % வைப்புநிதியை பெற்றுக்கொண்டார் என்று கூறப்பட்டுள்ளதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. எ.ம.சா.ஆ.4 கடிதம் வருங்கால வைப்புநிதி பிரிவிலிருந்து உதவி மேலாளர் சட்டம் பிரிவிற்கு கொடுக்கப்பட்டது என்றால் சரி. இ ந்த கடிதம் மனுதாரர்களுக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் அது தொடர்பாக மனுதாரர்களுக்கு தனியாக கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது . அந்த கடிதத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எ.ம.சா.ஆ.4 கடிதத்தில் கொடுக்கப்பட்டுள்ள கணக்கு மற்றும் வட்டி விவரங்கள் இந்த வழக்கிற்கான பின்யோசனையின் அடிப்படையில் மிகைப்படுத்தி ஜோடிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1999 ஏப்ரலிருந்து முதல் மார்ச் 2000 வரை ஓட்டுநர் ராஜுவின் ஈட்டிய வருமானத்தின் கணக்கு எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 1999 – 2000 வரை மனுதாரருக்குண்டான போனஸ் சதவிகிதம் பற்றி மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரி. எ.ம.சா.ஆ.5 ல் ஈட்டிய விடுப்பு இருப்பிலுள்ள நாட்கள் 5 என்று காட்டப்பட்டுள்ளது. பிப்ரவரி 2000 மாதத்திற்குரிய சம்பளம் தொழிலாளி ராஜுவுக்கு எவ்வளவு வழங்கப்பட்டது அதை அவர் பெற்றுக்கொண்டதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. IRTT பங்குத்தொகை ராஜுவுக்கு கொடுத்துவிட்டதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எ.ம.சா.ஆ.7 கடிதமும் எங்கள் இரு துறைகளுக்சிடையே கொடுக்கப்பட்ட கடிதம் என்றால்

சரிதான். ERBS பங்குத்தொகை மனுதாரருக்கு கொடுக்கவேண்டிய தொகைதான் என்று ஒப்புக்கொண்டுள்ளோம் என்றால் சரி. 30.06.2000 ல் ராஜூ என்ற தொழிலாளிக்கு பணி ஓய்வு குறித்து கடிதம் எதுவும் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 15.05.2010 ல் உத்தரவு மூலம் ராஜூ பணியிலிருந்தபோது இறந்துவிட்டார் என்று நீரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கிறேன் என்றால் சரிதான். பணியிலிருந்தபோது ஒரு தொழிலாளி இறந்துவிட்டால் குடும்ப பாதுகாப்பு நிதியாக ரூ.1,00,000/- கொடுப்பார்கள் என்றால் சரி. எ.ம.சா.ஆ.9 ல் 3 கடிதங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி. அதில் முதல் 2 கடிதங்கள் மனுதாரருக்கு சார்பு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. கொரியரில் அனுப்பியிருக்கிறோம் அதற்குரிய ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. அலுவலகத்தில் உள்ளது. தொழிலாளி ராஜுவுக்கு சமூகப்பாதுகாப்பு நிதி அவருடைய சம்பளத்திலிருந்து மாதா மாதம் பிடித்தம் செய்யப்பட்ட தொகை என்றால் சரி. அந்த நிதி பிடித்தம் செய்யப்பட்தற்கான பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. பே பில்லில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள மனுதாரர்கள் கோரிக்கை மீதான கணக்கீடுகளில் ஒரு தலைப்பில் கூட சரியான உண்மையான கணக்கீட்டை கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 15.05.2010 ல் எங்கள் நிர்வாகம் தொழிலாளி ராஜு பணியிலிருந்த போதே இறந்துபோனாதான உத்தரவு பிறப்பித்த நிலையில் மனுதாரருக்கு கிடைக்கக்கூடிய தொகையை கணக்கிட்டு அதிக பட்ச வட்டியுடன் மனுதாரர் கோரியுள்ள தொகையை எங்கள் நிர்வாகம் கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – தற்போது இல்லை.

(Sd/ S.Sumathy),
Presiding Officer,
Labour Court, Salem